# ஆசிரை

"இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின் படி எனக்கு ஆகட்டும்'' என்ற மரியாளின் வார்த்தையால் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். ஆடி மாதத்தில் எமது மறைத்தள பாதுகாவலியாம் மீட்பின் அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அன்னை தன்னை இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தாள். இறைவனின் திட்டம் எதுவோ அதை முழுவதும் நிறைவேற்றுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாக திகழ்ந்தாள். இறைவன் தூய மரியாவை மீட்பரின் தாயாக தெரிந்தெடுத்து, அவளை மீட்புப் பணியின் முக்கியபங்கு ஆற்றுவதற்கும், தனது திட்டத்தை வகுத்து வந்தார் என்பதை எமது வேதாகமத்தில் நாம் முழுமையாக காண்கிறோம். இறைவன் ஆதியிலே "உங்களுக்கு ஒருமீட்பரை வாக்களிக்கிறேன் அவர் உங்களை அனைத்து பாவத்திலுமிருந்து விடுவிப்பார்'' என்பதனை குறித்துக் காட்டி மனிதகுலத்தை இயேசுக்கிறிஸ்து வழியாக மீட்டார். இம் மீட்புத்திட்டத்தில் மரியாள் மீட்பரின் தாயாக தெரிவு செய்யப்பட்டு இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுகிற சிறப்பான பணியை ஆற்றுகிறாள். தூய மரியாளின் வாழ்வு முழுக்கமீட்புத் திட்டத்தோடு பின்னிப்பிணைந்ததாக இருந்ததை காணக்கூடியதாக உள்ளது. தான் மீட்பரின் தாய் என்ற நிலை மிகவும் தாழ்ச்சி நிறைந்ததாக இருந்ததை காணக்கூடியதாக உள்ளது. இவற்றிற்கு அடிப்படையான காரணம் தாழ்மையான உள்ளமும், எளிமையான, நேர்மையான வாழ்வுதான் என்பதில் சந்தேகமில்லை. இறைத்தந்தை தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மரியாள் மிகவும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்தார். இயேசுவின் மீட்புப்பணி மிகவும் கஸ்டமானதாகவும், கடினமானதாகவும், வியாகுலங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. ஆனால் அவருடையை தாய் உறுதுணையாகவும், பக்கபலமாகவும், ஆறுதலாகவும் மிகவும் ஒத்துழைப்பு கொடுப்பவராகவும் திகழந்தார் என்பதை இயேசுவின் பணிவாழ்விலே நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்த மீட்புப்பணி இன்னும் தொடர்ந்து கொண்டுள்ளது. திருச்சபைவழியாக எம் ஒவ்வொருவருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. "உலகெங்கும் சென்று மீட்பின் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசு திருத்தூதர்களை அனுப்பியபோது மீட்பின் பணியை கையளிக்கிறார். திருத்தூதாகள் வழிவந்த திருச்சபை எம் ஒவ்வொருவருக்கும் இப்பணியை பல்வேறு வகையில் ஆற்றுவதற்கு கையளித்துள்ளது. திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அப்பணியை செய்வதற்கு அழைக்கப்படுகிறார்கள். உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனத்தினூடாக உலகத்திற்கு மீட்புப்பணியை ஆற்ற அனுப்பப்படுகிறார்கள். குருத்துவம் என்னும் அருட்சாதனத்தினூடாக விசேட அழைப்புப் பெறுகிறார்கள். ஆகவே நாம் ஒவ்வொருவரும் மீட்பின் அன்னை போல் ஆண்டவர் இயேசுவிட்டுச் சென்ற மீட்பின் பணியை ஆற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆதனை பார்ப்போர் நிலையிலிருக்கும் நாம் ஒவ்வொருவரும் எமது அழைப்பை உணர்ந்து மீட்பின் பணியை செய்ய அழைக்கப் பெற்றிருக்கிறோம். இதற்காக எமதுமீட்பின் பாதுகாவலியாம் மீட்பின் அன்னை பரிந்துரைக்கும்படி மன்றாடுவோம்.

**அருட்பணி யூட் நிக்ஸன்**

**Parish Priest Our Lady of Deliverance Tamil Catholic Mission**

**Montreal (QC), Canada.**